தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் நேற்று முன்தினம் (15.07.2025) தொடங்கி வைக்கப்பட்டுள்ள உங்களுடன் ஸ்டாலின் சிறப்பு திட்ட முகாமினை, கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் சிவகங்கை மாவட்டம், எஸ்.புதூர் ஊராட்சி ஒன்றியத்தில் தொடங்கி வைத்து, பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் கா.பொற்கொடி, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் ஜி.அரவிந்த், இணைப்பதிவாளர் (கூட்டுறவு சங்கங்கள்) இராஜேந்திர பிரசாத் மற்றும் அரசின் பல்வேறு துறைகளை சார்ந்த முதன்மை அலுவலகர்கள் உள்ளனர்.

கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் நேற்று முன்தினம் (15.07.2025) வாராப்பூர் ஊராட்சியில் நடைபெற்ற அரசு விழாவின் போது, பெருந்தலைவர் காமராசர் அவர்களின் 123வது பிறந்த நாளையொட்டி அவரது திருவுருவப்படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் கா.பொற்கொடி, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் ஜி.அரவிந்த், இணைப்பதிவாளர் (கூட்டுறவு சங்கங்கள்) இராஜேந்திர பிரசாத் ஆகியோர் உள்ளனர்.

விருதுநகர் மாவட்டம்:

திருச்சுழி ஊராட்சி ஒன்றியத்தில் 'உங்களுடன் ஸ்டாலின்' முகாம்!

அமைச்சர் தங்கம் தென்னரசு தொடங்கி வைத்தார்! எஸ்.நவாஸ்கனி எம்.பி. முன்னிலை!

விருதுநகர் ஜூலை, 17 –

உங்களுடன் ஸ்டாலின் என்ற திட்டத்தினை நிதி,சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு அவர்கள் தொடங்கி வைத்தார்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நேற்று (15.07.2025) உங்களுடன் ஸ்டாலின் என்ற திட்டத்தினை கடலூர் மாவட்டம் சிதம்பரம் நகராட்சியில் தொடங்கி வைத்தார்.

அதனைத்தொடர்ந்து, விருதுநகர் மாவட்டம், திருச்சுழி ஊராட்சி ஒன்றியம், ஆலடிப்பட்டி ஊராட்சியில் உங்களுடன் ஸ்டாலின் திட்டத்தின் கீழ், நடைபெற்ற முகாமினை மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.என்.ஓ.சுகபுத்ரா, தலைமையில், இராமநாதபுரம் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.நவாஸ்கனி அவர்கள் முன்னிலையில் நிதி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு அவர்கள் தொடங்கி வைத்தார்.

பின்னர் நிதி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு தெரிவித்ததாவது:

பேரறிஞர் அண்ணா அவர்கள் மக்கள் பிரதிநிதியாக இருக்கக்கூடியவர்கள், மக்கள் நலனில் அக்கறை கொண்டிருக்கக்கூடியவர்கள், முதலில் நீங்கள் மக்களிடத்தில் செல்லுங்கள். மக்களிடத்தில் இருந்து துவங்குங்கள். மக்கள் என்ன வைத்திருக்கிறார்களோ அவர்களிடத்தில் இருந்து உங்கள் திட்டங்களை தீட்டுங்கள். அவர்களோடு இணைந்து பயணம் செய்யுங்கள்.அவர்களுடைய குறைகளை கேளுங்கள் என்று கூறினார்கள்.

அந்த வழியில், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான அரசு மக்களுடைய பிரச்சினைகளை ஒவ்வொரு ஊராட்சி மற்றும் நகராட்சி பகுதிகளிலும் இருக்கக்கூடிய கிராமங்களில் உங்களுடைய பல்வேறு கோரிக்கைகளை நேரடியாக அரசினுடைய அத்தனை துறைகளும் ஒரே இடத்திற்கு வந்து உங்கள் குறைகளை கேட்டு அவற்றை தீர்க்க க்கூடிய முகம்களை தமிழ்நாடு முழுவதும் இன்று நடத்திக் கொண்டிருக்கிறது.

தமிழ்நாட்டில் இத்திட்டத்தின் கீழ், மொத்தம் 10,000 முகாம்கள் நடைபெற உள்ளது. உங்களுடன் ஸ்டாலின் திட்டத்தின் கீழ் விருதுநகர் மாவட்டத்தில் மொத்தம் 349 சிறப்பு முகாம்கள் நடைபெற உள்ளது. இம்முகாம்கள் கிராமப்பகுதி யான 11 ஊராட்சி ஒன்றிய பகுதியில் 229 முகாம்களும், நகரப் பகுதிகளான சிவகாசி மாநகராட்சி, 5 நகராட்சிகள் மற்றும் 9 பேரூராட்சி பகுதிகளில் 120 முகாம்கள் என மொத்தம் 349 முகாம்கள் நடைபெற உள்ளது.

இம்முகாம்களில் நகரப்பகுதிகளில் 13 துறைகள் மூலம் 43 சேவைகளும் ஊரகப்பகுதிகளில் 15 துறைகள் மூலம் 46 சேவைகளும் அளிக்கப்படுகிறது.

நம்முடைய முதலமைச்சர் அவர்கள் மக்களின் கருத்துக்களை எல்லாம் உள்வாங்கி கொண்டு, அவர்களின் குறைகளை எல்லாம் நிவர்த்தி செய்து, தமிழ்நாடு முழுவதும் ஏறத்தாழ ஒரு லட்சம் தன்னார்வலர்கள் நியமிக்க ப்பட்டு, அவர்கள் முகாம் நடைபெறும் பகுதிகளில் தன்னார்வலர்கள் மூலம் துண்டுப் பிரசுரம் (யூசிஆடநவள) மற்றும் விண்ணப்பங்கள் பொது மக்களுக்கு அளிக்கப்பட்டு,; பொதுமக்களிடம் கலந்துரையாடி, அவர்களுக்கு தேவையான மற்றும் தேவைப்படும் திட்டங்கள் குறித்து எடுத்துரைத்து முகாமில் கலந்து கொண்டு பயனடைய உரிய விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது.

ஆலடிப்பட்டியை சுற்றியுள்ள ஊர்கள் அனைத்தும் சேர்ந்து சுமார் ஏறத்தாழ 1500 குடும்பங்கள் இருக்கின்றன. இந்:த குடும்பங்கள் எல்லாம் அவர்களுடைய கோரிக்கையை ஒரே இடத்தில் தருவதற்காக தான் இந்த முகாம் நடைபெறுகிறது.

மேலும், கலைஞர் மகளிர் உரிமைத்தொகை பெற தகுதியுள்ள விடுபட்ட மகளிர்கள் இம்முகாமிற்கு சென்று விண்ணப்பங்கள் அளித்தால் அவர்களுடைய தகுதியின் அடிப்படையில் கலைஞர் மகளிர் உரிமைத்தொகை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

இம்முகாமில் பெறப்படும் மனுக்களுக்கு 45நாட்களுக்குள் உரிய தீர்வு காணப்படும். மேலும், மக்கள் அனைவரும் தங்களுடைய குறைகளை இந்த முகாமில் தெரிவித்து பயன்பெறலாம். இந்த முகாமில் நீங்கள் நன்றாக உபயோகப்படுத்தும்படி நிதி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் தெரிவித்தார்.

பின்னர் மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்ததாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் உங்களுடன் ஸ்டாலின் என்ற சிறப்பு முகாமானது இன்று கடலூர் மாவட்டத்தில் உள்ள சிதம்பரம் நகராட்சியில் துவக்கி வைக்கப்பட்டுள்ளது.

இந்த மகத்தான திட்டத்தின் முன்னாடியாக மக்களுடன் முதல்வர் முகாம் செயல்படுத்தப்பட்டு வந்தது. அதில் உள்ள குறைகளை நிவர்த்தி செய்து, மக்கள் இருக்கும் இடத்திற்கு சென்று குறைகளை கேட்டறிந்து அதனை சரி செய்யும் அளவிற்கான சிறப்பான திட்டமாக உள்ளது.

அந்த வகையில் விருதுநகர் மாவட்டத்தில், உங்களுடன் ஸ்டாலின் என்ற சிறப்பு முகாம்கள் ஜீலை 15 ஆம் தேதி முதல் துவங்கி நவம்பர் 7 ஆம் தேதி வரை 349 முகாம் நடைபெற உள்ளது. இம்முகாமில் வரும் விண்ணப்பங்களை சரியான முறையில் விசாரணை செய்து தீர்வு காண உள்ளனர். இதில் முக்கிய சிறப்பு என்னவென்றால் தன்னார்வலர்கள் இந்த உங்களுடன் ஸ்டாலின் முகாம் பற்றிய கருத்துக்களையும், முகாமில் மக்களுக்கு கிடைக்கும் நன்மைகளை முகாம் நடைபெறுவருதற்கு முன்பாகவே வீடு, வீடாக சென்று மக்களின் குறைகளை கேட்டறிந்து விண்ணப்பங்களை கொடுத்துள்ளார்கள். மகளிர் உரிமைத்தொகை திட்டத்தில் பெண்கள் விண்ண ப்பங்களை அளித்து பயன் பெற வேண்டும் எனவும்,

இம்முகாமில் பெறப்படும் மனுக்களுக்கு 45நாட்களுக்குள் உரிய தீர்வு காணப்படும். எனவே, விருதுநகர் மாவட்டத்தில் உள்ள அனைத்து பொது மக்கள் உங்கள் வீட்டின் அருகிலுள்ள முகாம்களுக்கு சென்று மனுவை அளித்து தங்களின் குறைகளுக்கு தீர்வு காண இந்த வாய்ப்பினை பயன்படுத்தி கொள்ள வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.என்.ஓ.சுகபுத்ரா, தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், தனித்துணை ஆட்சியர் (சமூகபாதுகாப்புத் திட்டம்) காளிமுத்து, திட்ட இயக்குநர் (மகளிர் திட்டம்) மைக்கேல் ஜார்ஜ் ஆண்டனி, அருப்புக்கோட்டை வருவாய் கோட்டாட்சியர் (பொ) ரமேஷ், சத்துணவு திட்டத்தின் நேர்முக உதவியாளர் ஜெகதீசன், செயற்பொறியாளர் திருமதி வெண்ணிலா, உள்ளாட்சி பிரதிநிதிகள், பொதுமக்கள் மற்றும் அரசு அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

மதுரை வடக்கு மாவட்டம்

அலங்காநல்லூர் கிழக்கு, அலங்காநல்லூர் மேற்கு, அலங்காநல்லூர் வடக்கு, அலங்காநல்லூர் தெற்கு ஆகிய ஒன்றியங்களில் அடங்கியுள்ள ஊராட்சிகள் விவரம் - மற்றும் ஒன்றிய பொறுப்பாளர் - பொறுப்புக்குழு உறுப்பினர்கள் நியமனம்!

தலைமைக் கழகம் அறிவிப்பு!

கழக நிர்வாக வசதிக்காகவும் - கழகப் பணிகள் செவ்வனே நடைபெற்றிடவும் மதுரை வடக்கு மாவட்டத்திற்குட்பட்ட,அலங்காநல்லூர் கிழக்கு, அலங்காநல்லூர் மேற்கு ஆகிய இரண்டு ஒன்றியங்கள், **அலங்காநல்லூர் கிழக்கு, அலங்காநல்லூர் மேற்கு, அலங்காநல்லூர் வடக்கு, அலங்காநல்லூர் தெற்கு** ஆகிய 4 ஒன்றியக் கழகங்களாக பிரிக்கப்படுகிறது. அவ்வாறு பிரிக்கப்பட்ட ஒன்றியங்களுக்கு, ஒன்றிய பொறுப்பாளர் - பொறுப்புக்குழு உறுப்பினர்கள் நியமிக்கப்படுகின்றனர்.

மேற்கண்டவாறு பிரிக்கப்பட்ட **அலங்காநல்லூர் கிழக்கு, அலங்காநல்லூர் மேற்கு, அலங்காநல்லூர் வடக்கு, அலங்காநல்லூர் தெற்கு** ஆகிய ஒன்றியங்கள் பின்வரும் ஊராட்சிகள் கொண்டதாக அமையும்.

அலங்காநல்லூர் கிழக்கு ஒன்றியம் : 1.முடுவார்பட்டி, 2.தேவசேரி, 3.ஆதனூர்,4.பெரியஊர்சேரி, 5.பி.மேட்டுபட்டி , 6.வாவிடமருதூர், 7.அச்சம்பட்டி, 8.பண்ணைகுடி, 9.தண்டலை, 10.மணியஞ்சி, 11.கோட்டைமேடு ஆகிய 11 ஊராட்சிகள்.

அலங்காநல்லூர் மேற்கு ஒன்றியம் : 1.வடுகபட்டி, 2.தனிச்சியம், 3.அய்யங்கோட்டை, 4.கொண்டையம்பட்டி, 5.மேலசின்னனம்பட்டி, 6.கள்வேலிபட்டி, 7.பெரியஇலந்தைகுளம், 8.குட்டிமேய்க்கிபட்டி ஆகிய 8 ஊராட்சிகள்

அலங்காநல்லூர் வடக்கு ஒன்றியம் : 1.வலையபட்டி, 2.சத்திரவெள்ளாலபட்டி, 3.இராஜாக்காள்பட்டி, 4.66-மேட்டுப்பட்டி, 5.சேந்தமங்கலம், 6.கோடாங்கிபட்டி, 7.பாரைப்பட்டி, 8.வெள்ளையம்பட்டி, 9.மாணிக்கம்பட்டி ஆகிய 9 ஊராட்சிகள்

அலங்காநல்லூர் தெற்கு ஒன்றியம் : 1.டி.மேட்டுபட்டி, 2.தெத்தூர், 3.கல்லனை, 4.அழகாபுரி, 5.அய்யூர், 6.கீழச்சின்னனம்பட்டி, 7.எர்ரம்பட்டி, 8.சின்னஇலந்தைகுளம், 9.அ.கோவில்பட்டி ஆகிய 9 ஊராட்சிகள்

ஒன்றியக் கழகப் பொறுப்பாளர்கள் நியமனம்

மேற்கண்டவாறு அமையப் பெற்ற **அலங்காநல்லூர் கிழக்கு, அலங்காநல்லூர் மேற்கு, அலங்காநல்லூர் வடக்கு, அலங்காநல்லூர் தெற்கு** ஆகிய ஒன்றியக் கழகப் பணிகள் செவ்வனே நடைபெற, ஒன்றியக் கழகப் பொறுப்பாளர் - பொறுப்புக்குழு உறுப்பினர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

அலங்காநல்லூர் கிழக்கு ஒன்றியம்:

பொறுப்பாளர் : **அ.தனராஜ்,** 66, மேட்டுப்பட்டி, சேந்தமங்கலம் (அ), பாலமேடு(வழி), வாடிப்பட்டி(தா) மதுரை மாவட்டம்.

பொறுப்பு குழு உறுப்பினர்கள் : **பெ.தனுஷ்கோடி**, பண்ணைகுடி, அச்சம்பட்டி(அ),மதுரை. **சோ.சுந்தராஜன்**, முடுவார்பட்டி,முடுவார்பட்டி(அ), மதுரை. **பெ.ராஜேந்திரன்**, வலசை, அலங்காநல்லூர் (அ), மதுரை. **க.காமாட்சி (எ) மணிமாறன்**, முடுவார்பட்டி, முடுவார்பட்டி(அ), மதுரை. **பொ.ராசு,ஆதனூர்**, முடுவார்பட்டி(அ), மதுரை. **இ.சரவணன்,** தண்டலை, குமாரம்(அ), மதுரை. **ப.பிரவின்,** 15 பி மேட்டுப்பட்டி, மேட்டுப்பட்டி(அ), மதுரை. **செல்வி தி.ரேகா,**தேவசேரி, முடுவார்பட்டி(அ), மதுரை.

அலங்காநல்லூர் மேற்கு ஒன்றியம்

பொறுப்பாளர் : **வி.அருண்குமார்,** கல்வேலிபட்டி(அ), வாடிப்பட்டி(தா), மதுரை.

பொறுப்பு குழு உறுப்பினர்கள் : **ச.குழந்தைவேல்,** கொண்டையம்பட்டி(அ),வாடிப்பட்டி, மதுரை. **ரா.ரமேஷ்,** கோவிலூர்(அ),மதுரை. **மு.அமுதன்,** வடுகபட்டி, தனிச்சியம்(அ),மதுரை. **பா.ஜெயப்பிரகாஷ்**, பெரிய இலந்தைகுளம்(அ),மதுரை. **ப.பெரியசாமி**, தனிச்சியம்(அ), மதுரை. **ரா.காமாட்சி,** கீழக்கரை, குட்டிமேக்கிபட்டி(அ), மதுரை. **மோ.அலக்ஸ்பாண்டியன்**, அய்யங்கோட்டை(அ),மதுரை. **பா.தேன்மொழி,** பெரியஇலந்தைகுளம் (அ), மதுரை.

அலங்காநல்லூர் வடக்கு ஒன்றியம்

பொறுப்பாளர் : **அ.முத்தையன்**, வெள்ளையம்பட்டி(அ), பாலமேடு(வழி), வாடிப்பட்டி(தா), மதுரை.

பொறுப்பு குழு உறுப்பினர்கள் : **அ.பழனி,** சேந்தமங்கலம்(அ)மதுரை. **அ.இளமாறன்**, வெள்ளையம்பட்டி, மதுரை. **ரா.சின்னராசு**, பாரைப்பட்டி, கோடங்கிபட்டி(அ),மதுரை. **பெ.பெரியகருப்பன்**, பொந்துகம்பட்டி, சேந்தமங்கலம்(அ),மதுரை. **வெ.நாகராஜன்**, ராஜாக்காள்பட்டி,பாலமேடு(வழி),மதுரை. **ரா.சிவக்குமார்**, மாணிக்கம்பட்டி, வெள்ளையம்பட்டி (அ), மதுரை. **இ.காயத்ரி,** லக்கம்பட்டி, சத்திரவெள்ளாளபட்டி(அ), வாடிப்பட்டி(தா), மதுரை. **சி.குணசேகரன்**, வலையபட்டி, சத்திரவெள்ளாளபட்டி(அ), வாடிப்பட்டி(தா), மதுரை.

அலங்காநல்லூர் தெற்கு ஒன்றியம்

பொறுப்பாளர் : **சா.பரந்தாமன்,** அ.புதுப்பட்டி(அ), வாடிப்பட்டி(தா), மதுரை.

பொறுப்பு குழு உறுப்பினர்கள் : **மு.நடராஜன்,** இடையபட்டி, எரம்பட்டி(அ),மதுரை. **மு.தங்கமணி,** காந்திகிராமம், கல்லணை(அ), மதுரை. **க.சுந்தர்ராஜன்,** எரம்பட்டி(அ), மதுரை. **மூ.வடிவேல்.** கொழிஞ்சிபட்டி, தெத்தூர்(அ), மதுரை. **து.மகேஷ்,** வைகாசிபட்டி, எரம்பட்டி(அ), மதுரை. **ம.சேகர்,** கீழச்சின்னம்பட்டி, எரம்பட்டி(அ), மதுரை. **பா.அபுதாஹிர்,** அய்யூர்(அ), மதுரை. **மு.ராதா கிருஷ்ணன்**, சின்னஇலந்தைகுளம், மரியம்மாள்குளம்(அ), வாடிப்பட்டி, மதுரை.

துரைமுருகன்
பொதுச் செயலாளர்,
தி.மு.க.

"**அண்ணா அறிவாலயம்**"
சென்னை - 18
நாள்- 15.07.2025

நெல்லையில் "உங்களுடன்ஸ்டாலின்" திட்ட முகாம்!

பேரவைத் தலைவர் மு.அப்பாவு ஆய்வு!

நெல்லை, ஜூலை 17 -

நெல்லை மாவட்டத்தில் "உங்களுடன் ஸ்டாலின்" திட்ட முகாமினை சட்ட பேரவைத்தலைவர் மு.அப்பாவு துவக்கி வைத்து பார்வையிட்டார்.

முதலமைச்சர் அவர்கள் கடலூர் மாவட்டம், சிதம்பரத்தில் உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமினை நேற்று முன்தினம் (15.07.2025) தொடங்கி வைத்தார்கள். அதனைத் தொடர்ந்து, திருநெல்வேலி மாவட்டம்,டவுண் லெஷ்மி கல்யாண மண்டபத்தில் நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் திட்டம் முகாமில் சட்ட பேரவைத் தலைவர் மு.அப்பாவு, மாவட்ட ஆட்சியர் மரு.இரா.சுகுமார், தலைமையில் பாளையங்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் மு.அப்துல் வஹாப், மாநகராட்சி மேயர் கோ.ராமகிருஷ்ணன், மாநகராட்சி ஆணையாளர் மரு.மோனிகா ராணா, துணை மேயர் கே.ஆர்.ராஜூ, மாவட்ட ஊராட்சித்தலைவர் வி.எஸ்.ஆர். ஜெகதீஷ் ஆகியோர் முன்னிலையில் குத்துவிளக்கேற்றி முகாமினை பார்வையிட்டார்கள்.

இந்நிகழ்ச்சியில் சட்ட பேரவை பேரவைத்தலைவர் மு.அப்பாவு தெரிவித்ததாவது.

முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாடு முழுவதுமுள்ள மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி பகுதிகளில் 3768 முகாம்கள், கிராம ப்புறங் களிலுள்ள 6232 முகாம்கள் ஆக மொத்தம் 10,000 முகாம்கள் மூலம் உங்களுடன் ஸ்டாலின் திட்டத்தினை அறிமுகப்படுத்தி,கிராமப்புறங் களில் 15 துறைகள் மூலம் 46 சேவைகளும்,நகர் பகுதிகளில் 13 துறைகள் மூலம் 43 சேவைகள் பொதுமக்களுக்கு கிடைப்பதற்காக இத்திட்டத்தினை சிதம்பரத்தில் துவக்கி வைத்துள்ளார்கள். தமிழ்நாடு முழுவதும் இத்திட்டத்தில் மூலம் பொதுமக்களால் வழங்கப்படும் மனுக்களுக்கு 45 நாட்களில் தீர்வு காணப்படும்.

அதன்படி,திருநெல்வேலி மாவட்டத்தில் உங்களுடன் ஸ்டாலின் திட்டம் தொடங்கப்பட்டு இன்று தொடங்கப்பட்டுள்ளது. மாநகராட்சி பகுதிகளில் 55 வார்டுகளுக்கு 38 முகாம்களும், களக்காடு, விக்கிரமசிங்கபுரம்,அம்பாசமுத்திரம் ஆகிய 3 நகராட்சி பகுதிகளில் 69 வார்டுகளுக்கு 29 முகாம்களும், 17 பேரூராட்சிகளை சார்ந்த 273 வார்டு களுக்கு 34 முகாம்களும், ஊராட்சி பகுதிகளுக்கு 154 முகாம்க ளும் என 255 முகாம்கள் திருநெல்வேலி மாவட்டத்தில் இன்று முதல் 07.10.2025 வரை நடைபெறவுள்ளது.

இம்முகாம்களில் கலைஞர் மகளிர் உரிமைத்தொகைக்கான கோரிக்கை மனுக்கள் பெறுவதற்கு மூன்று அரங்குகள் அமைக்கப்பட்டுள்ளன. மருத்துவத்துறையின் மூலம் சிறப்பு மருத்துவ பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

அன்றாடம் பொதுமக்கள் அதிகமாக அணுகும் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை, வேளாண்மை உழவர்நலத் துறை, எரிசக்தித்துறை,கூட்டுறவு, உணவ மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை,மாற்றுத்திறனாளிகள் நலத்துறை,ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, பிற்படுத்த ப்பட்டோர் நலத்துறை, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை,வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை, குறு சிறு மற்றும் நடுத்தர தொழில் துறை,சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை,தகவல் தொழில்நுட்ப வியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை,சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை, கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை போன்ற துறைகளின் மூலம் பொதுமக்களின் கோரிக்கை மனுக்களுக்கு சேவைகள் வழங்கப்படவுள்ளது.

மேலும், தாட்கோ, மாவட்ட தொழில் மையம் போன்ற துறைகளின் மூலம் மானியத்தில் கடனுதவிகள் வழங்கப்பட்டு தொழில் முனைவோர்களாக மாறுவதற்கும் வாய்ப்புகள் வழங்கப்படுகிறது.கலைஞர் கைவினைத் திட்டம்,அண்ணல் அம்பேத்கர் தொழில் முன்னோடிகள் திட்டம், புதிய தொழில் முனைவோர் மற்றும் தொழில் நிறுவன மேம்பாட்டுத்திட்டம் போன்ற திட்டங்களில் பயனடைந்து புதிய தொழில் நிறுவனங்களை தொடங்கி, படித்த இளைஞர்கள் மற்றும் தொழில் தொடங்க ஆர்வமுள்ளவர் கள் இத்துறைகளை அணுகி தேவைப்படும் சான்றிதழ்களுடன் விண்ணப்பித்து தொழில் தொடங்குவதற்கு வாழ்க்கையில் முன்னேற் றம் அடைய வேண்டும். நடைபெற்று வரும் உங்களுடன் ஸ்டாலின் முகாமினை பயன்படுத்தி தங்களுக்கு தேவையான தீர்வுகளை பெற்று கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு சட்ட பேரவைத்தலைவர் மு.அப்பாவு தெரிவித்தார்.

நிகழ்வில் நெல்லை மாநகர பொறுப்பாளர்கள் சுப்பிரமணியன் தினேஷ், மாவட்ட வருவாய் அலுவலர் (நில எடுப்பு) இரா.ரேவதி கிறிஸ்தவ தேவாலயங்களில் பணியாற்றும் உபதேசியார்கள் மற்றும் பணியாளர்கள் நலவாரியத்தலைவர் விஜிலா சத்தியானந்த்,மாமன்ற உறுப்பினர்கள் டாக்டர் சங்கர், சுப்பிரமணியன்,ஜூலியட் மேரி, ராஜேஸ்வரி,வட்டாட்சியர் சந்திரஹாசன் உட்பட அரசு அலுவலர்கள்,பொதுமக்கள், தன்னார்வலர்கள் பலர் கலந்து கொண்டார்கள்.

முதலமைச்சரால் "உங்களுடன் ஸ்டாலின்" திட்ட முகாம் தொடங்கி வைக்கப்பட்டதைத்தொடர்ந்து,

சேலம் மாவட்டத்தில் "உங்களுடன் ஸ்டாலின்" திட்ட முகாம்!

சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் தொடங்கி வைத்துப் பார்வையிட்டார்!

சேலம், ஜூலை 17-

முதலமைச்சர் அவர்களால் "உங்களுடன் ஸ்டாலின்" திட்ட முகாம் நேற்று முன்தினம் (15.07.2025) தொடங்கி வைத்ததைத் தொடர்ந்து, சேலம் மாவட்டத்தில் சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் "உங்களுடன் ஸ்டாலின்" திட்ட முகாம் நடைபெறும் இடங்களில் ஒன்றான சேலம் மாநகராட்சி, சூரமங்கலம் மண்டலம் ஜாகீர் ரெட்டிப் பட்டி பி.சி.சி திருமண மண்டபத்தில் திட்டத்தினை தொடங்கி வைத்து பார்வையிட்டார்.

பின்னர் சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:-

முதலமைச்சர் அவர்களால் "உங்களுடன் ஸ்டாலின்" திட்டம் இன்றையதினம் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. "உங்களுடன் ஸ்டாலின்" என்ற திட்டத்தின் கீழ் சேலம் மாவட்டத்தில் இன்று முதல் வரும் நவம்பர் மாதம் வரை நகர்ப்புறப்பகுதிகளில் 168 முகாம்களும் மற்றும் ஊரகப் பகுதிகளில் 264 முகாம்களும் என மொத்தம் 432 சிறப்பு முகாம்கள் மூலம் பொதுமக்களின் கோரிக்கைகளுக்கு தீர்வு காணப்பட உள்ளது. தமிழ்நாட்டில் உள்ள கடைகோடி மக்கள் அன்றாடம் அணுகும் அரசுத்துறைகளின் சேவைகள் அவர்கள் வசிக்கும் பகுதிக்கு அருகாமையிலேயே சென்று வழங்குவதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

முகாம்களில் பங்கேற்க உள்ள அனைத்து பொதுமக்களுக்கும் அவர்களின் உடல்நலனை காத்திடும் வகையில் மருத்துவ சேவைகள் வழங்கிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ், சேலம் மாவட்டத்தில் தன்னார்வலர்கள் மூலம் வீடு வீடாகச் சென்று விண்ணப்பங்கள் மற்றும் தகவல் கையேடுகள் வழங்கி அவர்களை இம்முகாம்களில் பங்கேற்க செய்து கோரிக்கைகளுக்கு தீர்வு காண நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மேலும், முகாம் நடைபெறும் இடங்களில் பொதுமக்களுக்குத் தேவையான குடிநீர் வசதி, சாமியான வசதி, சுகாதார வசதி, மாற்றுத்திறனாளிகளுக்கான சாய்வுதள வசதி உள்ளிட்ட அனைத்து அடிப்படை வசதிகள் மற்றும் மருத்துவ முகாம்கள், இசேவை மையங்கள் உள்ளிட்ட பல்வேறு வசதிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இம்முகாமில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை, நகராட்சி நிர்வாகத் துறை, கூட்டுறவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை, எரிசக்தித்துறை, மாற்றுத்திறனாளிகள் நலத்துறை, வேளாண்மை உழவர் நலத்துறை, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை, ஆதிதிராவிடர் நலத்துறை, தொழிலாளர் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, சிறு குறு நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை, தகவல் தொழில் நுட்ப துறை, கால்நடை பராமரிப்புத்துறை, மீன்வளத்துறை மற்றும் பால்வளத்துறை என ஊரகப்பகுதிகளில் 15 துறைகள் மற்றும் நகர்ப்புறப்பகுதிகளில் 13 துறைகளின் வாயிலாக செயல்படுத்தப்படும் கலைஞர் மகளிர் உரிமைத்தொகை, வீட்டு வரி, சொத்து வரி, பெயர் மாற்றம், புதிய குடிநீர் இணைப்பு, கட்டட மனைப்பிரிவு அனுமதி, பட்டாவில் பெயர் மாற்றம், சாதிச்சான்று, இருப்பிடச்சான்று, வருமான சான்று, வாரிசு சான்று, தனிப்பட்டா, கூட்டுப்பட்டா, முதியோர் உதவித்தொகை, மாற்றுத்திறனாளிகள் நல உதவித் தொகை, மின்னணு குடும்ப அட்டை, ஆதார் அட்டை, பெண் குழந்தைகள் பாதுகாப்பு திட்டம் உள்ளிட்ட சேவைகள் இத்திட்டத்தின் மூலம் வழங்கப்படுகிறது.

முதலமைச்சர் அவர்கள் உங்களுடன் ஸ்டாலின் திட்டத்தில் பெறப்படும் மனுக்கள் அனைத்திற்கும் 45 நாட்களுக்குள் தீர்வு காண வேண்டுமென உத்தரவிட்டுள்ளார்கள். முதலமைச்சர் அவர்கள் தொடர்ச்சியாக தமிழ்நாட்டு மக்களின் நலன் சார்ந்த பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். ஏற்கனவே பல்வேறு திட்டங்கள் வாயிலாக பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்கள் பெறப்பட்டு அதற்கான தீர்வுகள் வழங்கப்பட்டுள்ளன. அவற்றில் விடுபட்ட பொதுமக்கள் பயன்பெறும் வகையில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது.

சேலம் மாவட்டத்தில் ஏற்கனவே கலைஞர் மகளிர் உரிமைத் தொகை வாயிலாக 5.50 இலட்சம் மகளிர் பயனடையும் வகையில் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கலைஞர் மகளிர் உரிமைத் தொகைக்கான விதிகளில் சற்று தளர்வு ஏற்படுத்தி அறிவித்துள்ளார்கள். தற்பொழுது கலைஞர் மகளிர் உரிமைத்தொகை கோரி பெறப்படும் விண்ணப்பங்கள் அனைத்தும் பரிசீலிக்கப்படும்.

இவ்வாறு சுற்றுலாத் துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் தெரிவித்தார்.

முன்னதாக முதல மைச்சர் அவர்களால் "உங்களுடன் ஸ்டாலின்" திட்ட முகாம் நேற்று முன்தினம் (15.07.2025) தொடங்கி வைத்ததைத்தொடர்ந்து, சேலம் மாவட்டத்தில் சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் "உங்களுடன் ஸ்டாலின்" திட்ட முகாம் நடைபெறும் சேலம் மாநகராட்சி, சூரமங்கலம் மண்டலம் ஜாகீர் ரெட்டிப்பட்டி பி.சி.சி. திருமண மண்டபத்தில் திட்டத்தினை தொடங்கி வைத்து பார்வையிட்டார்.

சேலம் மாவட்டத்தில் இன்றையதினம் நகர்ப்புறத்தை ஒட்டியுள்ள கிராம ஊராட்சி, எருமாபாளையம் பகுதிக்குட்பட்டவர்களுக்கு எருமாபாளையம் வள்ளுவர் நகர் முத்தாயம்மாள் திருமண மண்டபத்திலும், எடப்பாடி நகராட்சி வார்டு 1,2,3க்குட்பட்டவர்களுக்கு எடப்பாடி ஜே.கே.பி. சாலை நாச்சிபாளையம் காளியம்மன் கோவில் திருமண மண்டபத்திலும், அயோத்தியாப்பட்டணம் பேரூராட்சி, வார்டு